**<u>அசல் வழக்கு எண். 239/2019</u>**

14.10.2025

**பெயர் – ஆனந்தி** (PW2)

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) எனது கணவர் தான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார். இடையூறு செய்ய வேண்டாம் என்ற நிவாரணம் கேட்டுள்ளார். தாவாச் சொத்து சம்மந்தமாக தனக்கு ஊர்ஜிதம் செய்து கொள்ள பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே தாவாச் சொத்து சம்மந்தமாக உத்திரவாகியுள்ளது. எனது கணவரின் சொந்த ஊர் சாளரப்பட்டி. தற்போது காரத்தொழுவில் உள்ளோம். இங்கு வந்து சுமார் 13 வருடங்கள் ஆகிறது. தாவா சொத்தின் அருகே எனது கணவர் பெயரில் வேறு சொத்து உள்ளது. அந்த இடத்தில் வீடு கட்டி வாடகைக்கு விட்டுள்ளோம். அந்த சொத்தை பொறுத்து ஒரு தாவா நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல தீர்ப்பாகிவிட்டது. அந்த இடத்தின் அருகே வேறு இரண்ட இடங்களைப் பொறுத்து இரண்டு வழக்குகள் மாண்பமை உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது. நான் எனது கணவருடன் தான் வசித்து வருகிறேன். தாவாச் சொத்து அருகில் எனது கணவருக்கு மூன்று இடங்கள் உள்ளது என்றால் தெரியாது.

(2) அசல் வழக்கு எண். 56/2018 வழக்கில் சம்மந்தப்பட்ட தாவாச் சொத்து எனது கணவர் அவருக்கு பட்டா மூலம் கிடைத்தது என்ற அடிப்படையில் வழக்கு போட்டார் என்றால் சரியல்ல. முபாரக் அலி மற்றும் வெள்ளைச்சாமி என்பவரிடமிருந்து எனது கணவர் வாங்கினார். அந்த நிலத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான் தொகுப்பு வீடு கட்டியுள்ளார். இந்த வழக்கின் தாவாச் சொத்து ஆதியில் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அரசாங்கத்தால் எனது அம்மா பெயருக்கு வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். எனது பெயருக்கு 21.02.2017 ம் தேதி எனது அம்மா செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். உடனே 10.03.2017 ம் தேதி எனது கணவர் பெயருக்கு கிரையம் ஏற்படுத்தி உள்ளோம் என்றால் சரிதான் அடுத்த மாதம் செய்தோம். நேரடியாக எனது கணவர் பெயரில் ஏன் கிரையம் பெறவில்லை என்றால் எனக்கு இரண்டு பேர் உடன் பிறந்தவர்கள் உள்ளார்கள் அதனால் எனது பெயரில்

செட்டில்மெண்ட் எழுதி வைத்து நான் கிரையம் கொடுத்தேன். எனது கணவர் அரசு வேலையில் இருந்து தற்போது ஒழுங்கு நடவடிக்கை காரணமாக இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தின் வருவாய் ஆவணங்கள் எனது கணவரால் பொய்யாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவர் மாற்றுத் திறனாளி என்றால் சமீபத்தில் சுமார் 5 வருடங்களாக நடக்க முடியாமல் மாற்றுத்திறனாளியாக உள்ளார். ஓட்டுநராக பணிக்கு சென்ற போது விபத்து ஏற்பட்டது.

(3) தாவாச் சொத்து பழைய சர்வே எண். 656/E1 புதிய சர்வே எண்.1056/1 என்ற S.F.No.7 ல் கோவில் நிலமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அதன் விஸ்தீர்ணம் 14.1 செண்ட் என்றால் சரியல்ல. சாட்சி கோவில் நிலம் என்று நீங்கள் செல்லும் நிலத்தின் விஸ்தீர்ணம் 4.38 செண்ட் என்று சொன்னார். தாவா சொத்து ராமநாத சாஸ்திரிகள் என்பவருக்கு பாத்தியப்பட்டு 06.01.1993 ம் தேதி அவரால் கோவிலுக்காக 1ம் பிரதிவாதி சிவாச்சல குருக்கள் பெயரில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. சிவாச்சல குருக்கள் 14 ½ செண்ட் இடத்தை பராமரித்து கோவிலில் பூஜை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த இடத்தை நாங்கள் ஆக்கிரமித்து வீடு கட்டிய போது சிவாச்சல குருக்கள் வருவாய் துறையிடம் மனு கொடுத்து தடுக்க முயற்சி செய்தார் என்றால் சரியல்ல. 18.02.2022ம் தேதி வருவாய் துறையினர் விசாரணை செய்து தாவா இடம் S.F.7ல் கோவில் நிலம் தான் என்றும் வழக்கு நிலுவையில் உள்ளதால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மாவட்ட ஆட்சியருக்கு தகவல் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

(4) அரசாங்கம் இலவச வீட்டு மனை பட்டா வீடில்லாத நபர்களுக்கு தான் வழங்கப்படும் என்றும் எனது கணவர் மூன்று பட்டா முறைகேடாக பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. கோவில் நிலத்தை ஆக்கிரமிப்பதற்காக போலியாக பட்டா தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல 1ம் பிரதிவாதி தாவாச் சொத்தில் தகராறு செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் வேண்டுமென்றே பொய்யாக சங்கதிகளுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா இடம் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றும், அரசு ஆவணங்களில் கோவில் நிலம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் எனவே தாவா இடத்தில் எங்களுக்கு பாத்தியம் இல்லை

என்றால் சரியல்ல. எங்களுக்கு பாத்தியமில்லாத சொத்து என்பதன் அடிப்படையில் நாங்கள் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது கணவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.10.14 16:43:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்